ந.க.எண். 189/ 2010

வேலூர் மாவட்டம்.
பள்ளிகொண்டா பேரூராட்சி
நாள்.31. 05.2010.

# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

2010–11 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 17 ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவர்களால் கீழ்கண்ட பணிகளுக்காக மூடி முத்திரையிட்டு அரக்கிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. அப்படி வரப்பெறும் ஒப்பந்தபுள்ளிகள் அன்றே பிற்பகல் 3–30 மணிக்கு வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும் அதற்கான ஒப்பந்தபுள்ளி படிவங்கள் 16.06.2010 ஆம் தேதி மாலை 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் தொகையினை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். கீழ்கண்ட பணிகளுக்கான டேவணித் தொகைகளை 17.06.2010 தேதி அன்று பிற்பகல் 2.00 மணிக்குள் செலுத்தி இரசீது பெற்றுக் கொண்டு ஒப்பந்தபுள்ளிகளுடன் அசல் இரசீது இணைக்கப்பட வேண்டும்.

## அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010 – 2011

| வ. எ | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (இலட்சம்) | டேவணித் தொகை | ஷெட்யூல் விற்பனை தொகை | செய்து முடிக்க வேண்டிய காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| 1. | அய்யாவு நகர் தார் சாலை உடன் கல்வர்ட் அமைத்தல். | 5.00 | 10,000 | 780 | 4 மாதங்கள் |
| 2. | வெட்டுவாணம் அம்பேத்கார் நகர் புதிய காலனி கிழக்கு மேற்கு 5வது தெரு வடக்கு தெற்கு 1வது தெரு, வடக்கு தெற்கு 2வது தெரு, வடக்கு தெற்கு 3வது தெரு தார் சாலை அமைத்தல். | 5.00 | 10,000 | 780 | 4 மாதங்கள் |
| 3. | பள்ளிகொண்டா பேரூராட்சி பள்ளிகொண்டா கிராம சர்வே எண். 272/2ஏ, 8ப, 9 ப மற்றும் 10 ப ல் ஏற்கனவே தரைத்தளத்துடன் உள்ள சமுதாய கூடத்தில் முதல் தளம் கட்டும் பணி மேற்கொள்ளுதல். | 20.00 | 40,000 | 6,240 | 6 மாதங்கள் |
| 4. | வெட்டுவாணம் கிராம சர்வே எண். 320 ல் பூங்கா அமைத்தல் | 2.50 | 5,000 | 780 | 3 மாதங்கள் |
| 5. | பள்ளிகொண்டா கிராம சர்வே எண். 104, 105, 106/3, 107, 108, 109, 110, 116 மற்றும் 117 ல் பூங்கா அமைத்தல். | 2.50 | 5,000 | 780 | 3 மாதங்கள் |
| 6. | சின்ன கோவிந்தம்பாடி கீழ்வாடை தெரு, சின்னகோவிந்தம்பாடி மேல்வாடை தெரு சிமெண்ட்சாலை அமைத்தல் | 3.40 | 6,800 | 780 | 2 மாதங்கள் |
| 7. | வெட்டுவானம் மகாமாரியம்மன் கோயில் தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 1.20 | 2,400 | 312 | 2 மாதங்கள் |

pdfMachine
A pdf writer that produces quality PDF files with ease!
Produce quality PDF files in seconds and preserve the integrity of your original documents. Compatible across nearly all Windows platforms, simply open the document you want to convert, click "print", select the "Broadgun pdfMachine printer" and that's it! Get yours now!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8. | வேப்பங்கால் பிள்ளையார் கோயில் 1வது குறுக்கு தெரு, வேப்பங்கால் 3வது தெரு வேப்பங்கால் கரம்பு 1வது குறுக்கு தெரு மற்றும் வேப்பங்கால் கரம்பு 2வது குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 1.60 | 3,200 | 312 | 2 மாதங்கள் |
| 9. | பள்ளிகொண்டா சர்வே எண்.124A/1ல் வணிகவளாகம் கட்டுதல் | 10.00 | 20,000 | 1,560 | 6 மாதங்கள் |
| 10. | பள்ளிகொண்டா பேரூராட்சி 1, 2, 3, 4, 10, 11, 12, 13 மற்றும் 14 ஆகிய வார்டுகள் பகுதி மக்கள் பயன்பாட்டில் உயர் மட்ட பாலம் அருகில் பள்ளிகொண்டா கிராம சர்வே எண். 302/1A உள்ள சுடுகாட்டிற்கு அனைத்து வசதிகள் கூடிய பணிகள் மேற்கொள்ளுதல். | 5.00 | 10,000 | 780 | 4 மாதங்கள் |
| 11 | ஜமேதார் தோப்பு 2–வது தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 3.00 | 6,000 | 780 | 2 மாதங்கள் |
| 12. | 10வது வார்டு திருவள்ளுவர் நகர் சிமெண்ட் சாலையுடன் கால்வாய் கட்டுதல் | 2.00 | 4,000 | 780 | 2 மாதங்கள் |
| 13. | 13 வது வார்டு பஜனை கோயில் தெரு மற்றும் குறுக்கு தெரு 1 குறுக்கு தெரு 2 சிமெண்ட் சாலை அமைத்தல் | 3.30 | 6,600 | 780 | 2 மாதங்கள் |

## ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளி பெற்றுக்கொள்ள விருப்பமுள்ளவர்கள் 16.06.2010 வரை அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் தொகையினை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற்றுக்கொள்ளலாம்.

2. ஒப்பந்தப்புள்ளி கொடுத்துக்கொள்ள விருப்பமுள்ளவர்கள் உரிய ஒப்பந்தப்புள்ளி டேவணித் தொகைகளை ரொக்கமாக பள்ளிகொண்டா தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட வேண்டிய தேதியில் 17.06.2010 பிற்பகல் 2.00 மணிக்குள் செலுத்தி ஒப்பந்தப்புள்ளி உடன் உரிய இரசீதை இணைத்து அரக்கு முத்திரையிட்டு ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிக்க வேண்டும்.

3. டேவணித் தொகை செலுத்தாத ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் உரிய வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி ஷெட்யூல் படிவத்தில் பூர்த்தி செய்து தான் ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்.

5. குறிப்பிட்ட தேதியில் குறிப்பிட்ட நேரத்திற்குள் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டும். காலதாமதமாக வரும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அன்றைய தேதியில் ஆஜராகியிருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

7. ஒப்பந்தப்புள்ளி பள்ளிகொண்டா தேர்வுநிலை பேரூராட்சி மன்ற அங்கீகாரத்திற்கும், மற்றும் மேலதிகாரிகள் ஒப்பந்தப்புள்ளி விதிகளுக்கு உட்பட்டதாகும்.

8. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையில் குறிப்பிட்டுள்ள நாட்களுக்குள் ஒப்படைக்கப்பட்ட வேலையை முடிக்கப்பட வேண்டும்.

9. அனைத்து பணிகளும் பணி முடிவுற்ற பின்னர் உரிய காலத்திற்கு பராமரிக்கப்பட வேண்டும். மேலும் அதற்கான தொகை பட்டியலில் 5% பிடித்து கணக்கில் வைக்கப்படும்.

**pdfMachine**
**A pdf writer that produces quality PDF files with ease!**
Produce quality PDF files in seconds and preserve the integrity of your original documents. Compatible across nearly all Windows platforms, simply open the document you want to convert, click "print", select the "Broadgun pdfMachine printer" and that's it! Get yours now!

10. வேலைகள் முடிவு பெற்றதற்கான இறுதி பட்டியல் தொகை வழங்கும்போது உரிய வரிகள் பிடித்தம் செய்யப்படும். மேலும் பராமரிப்பு காலம் முடிந்த பின்னரே 5% தொகை திரும்ப வழங்கப்படும்.

11. பள்ளிகொண்டா தேர்வுநிலை தேர்வுநிலை பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து மட்டுமே டெண்டர்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

12. 2010 – 2011 ஆம் ஆண்டுக்கு ஒப்பந்ததாரர்கள் பதிவினை புதுப்பித்து இருக்க வேண்டும். புதுப்பிக்காத ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தபுள்ளி படிவம் வழங்கப்படமாட்டாது.

13. எந்த ஒப்பந்தப்புள்ளியையும் யாதொரு காரணமும் இன்றி நிராகரிக்கவும் நிர்வாக காரணங்களால் ஒப்பந்தப்புள்ளியை ஒத்தி வைக்கவும் செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

14. ஒப்பந்தபுள்ளி ஒப்புக்கொள்ளப்பட்ட பின் அளவு மற்றும் மேல் அளவு செய்யும் அலுவலருக்கு திருப்தி ஏற்படும் வகையில் வேலை செய்து முடிக்க வேண்டும். அதன்படி செய்யத் தவறினாலும் அல்லது வேலைகளில் செய்து முடிக்க காலதாமதம் ஏற்பட்டாலும் டெண்டர்தாரருக்கு முன் அறிவிப்பு இன்றி மேற்படி வேலைகளை வேறு நபர்களை கொண்டோ அல்லது இலாகா மூலமாகவோ செய்து முடித்து அதனால் பள்ளிகொண்டா தேர்வுநிலை பேரூராட்சிக்கு ஏதாவது நட்டம் ஏற்பட்டால் அந்த நட்டத்தை ஒப்பந்ததாரரிடமிருந்து ரொக்கமாகவோ அவர் செலுத்தியிருக்கும் டெண்டர் டேவணித் தொகையிலிருந்தோ வசூலிக்கப்படும்.

15. ஒப்புக்கொள்ளப்பட்ட வேலைகளை செயல் அலுவலர் அவர்களால் நிர்ணயிக்கப்படும் கால அளவுக்குள் செய்து முடிக்க தவறினால் தக்கபடி அபராதம் விதிக்க நிர்வாக அலுவலர் அவர்களுக்கு அதிகாரம் உண்டு. அதன்படி விதிக்கப்படும் அபராதத் தொகையை ஒப்பந்ததாரருடைய பட்டியலிலிருந்தோ அல்லது டெபாசிட் தொகையிலிருந்தோ பிடித்தம் செய்து கொள்ளப்படும்.

16. பள்ளிகொண்டா தேர்வுநிலை பேரூராட்சியினரால் டெண்டர்களை ஒப்புக்கொள்ளப்பட்ட ஒருவார கால அளவுக்குள் ஒப்பந்ததாரர் தன் சொந்த செலவில் ரூ.20/– க்கான முத்திரை தாளில் உரிய ஒப்பந்தம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

17. ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கத் தவறினாலும், குறிப்பிட்ட கால அளவுக்குள் வேலைகளை செய்து முடிக்க தவறினாலும், ஒப்பந்தத்தை ரத்து செய்து மேற்படி வேலைகளை செய்ய மாற்று ஏற்பாடு செய்யப்படும். இதனால் ஏற்படும் சகல நட்டங்களுக்கும் முதல் டெண்டர்தாரரே முழு பொறுப்பு ஆவார். அதன்படி ஏற்படும் நட்டத்தை டெண்டர்தாரருக்கு சேர வேண்டிய பட்டியல் தொகை அல்லது டேவணித்தொகை அல்லது மேற்கண்ட இரண்டு தொகைகளில் இருந்து மிகாமல் வசூல் செய்து கொள்ள செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. இது சம்மந்தமாக நிர்வாக அலுவலருடைய முடிவே இறுதியானது. அதைப்பற்றி கேட்க ஒப்பந்ததாரருக்கு எவ்வித உரிமையும் கிடையாது.

18. வேலைகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே, டெண்டர்களை கொடுக்க வேண்டும்.

19. இதர நிபந்தனைகள் செயல் அலுவலரால் 1920–ஆம் வருடத்திய நகராட்சிகள் சட்டம் டெண்டர் சம்மந்தமாக அனைத்து பிரிவுகளின்படி விதிக்கும் நிபந்தனைகளுக்கு ஒப்பந்ததாரர் கட்டுப்பட்டவராவர்.

20. கட்டிட தொழிலாளர் காப்பீட்டு நல நிதி சந்தா தொகை 0.3% மதிப்பீட்டின்படி கணக்கிட்டு, கட்டிட தொழிலாளர் நலவாரியத்திற்கு வங்கி வரைவோலை செலுத்திய பின்னர்தான், ஏற்கப்பட்ட ஒப்பந்ததாரருக்கு வேலைக்கான உத்திரவு வழங்கப்படும்.

21. கட்டுமான வேலை மற்றும் அனைத்து வேலைகளின் தரம் ஆய்வுக்கு உட்படுத்தப்படும். இதன் முடிவின் பொறுப்பு ஒப்பந்ததாரர்களை சாரும்.

22. பணி குறித்த விபரங்கள் அடங்கிய பெயர் பலகை பணிதலத்தில் வைக்கப்பட வேண்டும்.

**pdfMachine**
**A pdf writer that produces quality PDF files with ease!**
Produce quality PDF files in seconds and preserve the integrity of your original documents. Compatible across nearly all Windows platforms, simply open the document you want to convert, click "print", select the "Broadgun pdfMachine printer" and that's it! Get yours now!

23. பணிகள் மேற்கொள்ளவிருக்கும் இடத்தினை பணி ஆரம்பிப்பதற்கு முன்னரும் பணி முடித்த பின்னரும் புகைப்படம் எடுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்படவேண்டும்.

24. பணிகள் தொடர்பான ஆவணங்கள் http://townpanchayat.tn.gov.in/tender மற்றும் www.tenders.tn.gov.in ஆகிய இணையதள முகவரியில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**செயல் அலுவலர்**
பள்ளிகொண்டா பேரூராட்சி,
வேலூர் மாவட்டம்.

**பெறுநர்**

பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள், பள்ளிகொண்டா பேரூராட்சி.

**நகல்**

1) உயர் திரு. சட்டமன்ற உறுப்பினர், அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி அவர்களின் தகவலுக்கு அனுப்பப்படுகிறது .
2) பேரூராட்சிகள் இயக்குநர், குறளகம், சென்னை–108 அவர்களுக்கு தகவலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3) மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள், வேலூர்–9, அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
4) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், வேலூர் மண்டலம், வேலூர்–9, அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
5) உதவி செயற் பொறியாளர், பேரூராட்சிகள் துறை, வேலூர் மாவட்டம், வேலூர்–9, அவர்களுக்கு அனுப்பப்படுகிறது .
6) இளநிலை பொறியாளர், பள்ளிகொண்டா தேர்வுநிலை பேரூராட்சி, (தலைமையிடம்) அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.
7) தலைவர், துணைத்தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் பள்ளிகொண்டா பேரூராட்சி, அவர்களுக்கு தகவலுக்காக.
8) அலுவலக விளம்பர பலகைக்கு.

**pdfMachine**
**A pdf writer that produces quality PDF files with ease!**
Produce quality PDF files in seconds and preserve the integrity of your original documents. Compatible across nearly all Windows platforms, simply open the document you want to convert, click "print", select the "Broadgun pdfMachine printer" and that's it! Get yours now!

ந.க.எண். 189/ 2010

வேலூர் மாவட்டம்
பள்ளிகொண்டா பேரூராட்சி
நாள்.31. 05.2010.

# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

2010–11 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 17 ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவர்களால் கீழ்கண்ட பணிகளுக்காக மூடி முத்திரையிட்டு அரக்கிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. அப்படி வரப்பெறும் ஒப்பந்தபுள்ளிகள் அன்றே பிற்பகல் 3–30 மணிக்கு வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும் அதற்கான ஒப்பந்தபுள்ளி படிவங்கள் 16.06.2010 ஆம் தேதி மாலை 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் தொகையினை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். கீழ்கண்ட பணிகளுக்கான டேவணித் தொகைகளை 17.06.2010 தேதி அன்று பிற்பகல் 2.00 மணிக்குள் செலுத்தி இரசீது பெற்றுக் கொண்டு ஒப்பந்தபுள்ளிகளுடன் அசல் இரசீது இணைக்கப்பட வேண்டும்.

1. முழுமையான விபரங்களுக்கு அரசு இணையதள முகவரி www.tenders.tn.gov.in மற்றும் www.townpanchayat.tn.gov.in/tenders –யிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
2. மேலும், இந்த வேலைகள் தொடர்பான கூடுதல் விபரங்கள் (ம) நிபந்தனைகள் தேவைப்படின், செயல் அலுவலர், பள்ளிகொண்டா பேரூராட்சி, வேலூர் மாவட்டம் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

## அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010 – 2011

| வ. எ | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (இலட்சம்) | டேவணித் தொகை | ஷெட்யூல் விற்பனை தொகை | செய்து முடிக்க வேண்டிய காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| 1. | அய்யாவு நகர் தார் சாலை உடன் கல்வர்ட் அமைத்தல். | 5.00 | 10,000 | 780 | 4 மாதங்கள் |
| 2. | வெட்டுவாணம் அம்பேத்கார் நகர் புதிய காலனி கிழக்கு மேற்கு 5வது தெரு வடக்கு தெற்கு 1வது தெரு, வடக்கு தெற்கு 2வது தெரு, வடக்கு தெற்கு 3வது தெரு தார் சாலை அமைத்தல். | 5.00 | 10,000 | 780 | 4 மாதங்கள் |
| 3. | பள்ளிகொண்டா பேரூராட்சி பள்ளிகொண்டா கிராம சர்வே எண். 272/2ஏ, 8ப, 9 ப மற்றும் 10 ப ல் ஏற்கனவே தரைத்தளத்துடன் உள்ள சமுதாய கூடத்தில் முதல் தளம் கட்டும் பணி மேற்கொள்ளுதல். | 20.00 | 40,000 | 6,240 | 6 மாதங்கள் |
| 4. | வெட்டுவாணம் கிராம சர்வே எண். 320 ல் பூங்கா அமைத்தல் | 2.50 | 5,000 | 780 | 3 மாதங்கள் |
| 5. | பள்ளிகொண்டா கிராம சர்வே எண். 104, 105, 106/3, 107, 108, 109, 110, 116 மற்றும் 117 ல் பூங்கா அமைத்தல். | 2.50 | 5,000 | 780 | 3 மாதங்கள் |
| 6. | சின்ன கோவிந்தம்பாடி கீழ்வாடை தெரு, | 3.40 | 6,800 | 780 | 2 மாதங்கள் |

pdfMachine
A pdf writer that produces quality PDF files with ease!
Produce quality PDF files in seconds and preserve the integrity of your original documents. Compatible across nearly all Windows platforms, simply open the document you want to convert, click "print", select the "Broadgun pdfMachine printer" and that's it! Get yours now!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சிமெண்ட்சாலை அமைத்தல் | | | | |
| 7. | வெட்டுவானம் மகாமாரியம்மன் கோயில் தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 1.20 | 2,400 | 312 | 2 மாதங்கள் |
| 8. | வேப்பங்கால் பிள்ளையார் கோயில் 1வது குறுக்கு தெரு, வேப்பங்கால் 3வது தெரு வேப்பங்கால் கரம்பு 1வது குறுக்கு தெரு மற்றும் வேப்பங்கால் கரம்பு 2வது குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 1.60 | 3,200 | 312 | 2 மாதங்கள் |
| 9. | பள்ளிகொண்டா சர்வே எண்.124A/1ல் வணிகவளாகம் கட்டுதல் | 10.00 | 20,000 | 1,560 | 6 மாதங்கள் |
| 10. | பள்ளிகொண்டா பேரூராட்சி 1, 2, 3, 4, 10, 11, 12, 13 மற்றும் 14 ஆகிய வார்டுகள் பகுதி மக்கள் பயன்பாட்டில் உயர் மட்ட பாலம் அருகில் பள்ளிகொண்டா கிராம சர்வே எண். 302/1A உள்ள சுடுகாட்டிற்கு அனைத்து வசதிகள் கூடிய பணிகள் மேற்கொள்ளுதல். | 5.00 | 10,000 | 780 | 4 மாதங்கள் |
| 11 | ஜமேதார் தோப்பு 2–வது தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 3.00 | 6,000 | 780 | 2 மாதங்கள் |
| 12. | 10வது வார்டு திருவள்ளுவர் நகர் சிமெண்ட் சாலையுடன் கால்வாய் கட்டுதல் | 2.00 | 4,000 | 780 | 2 மாதங்கள் |
| 13. | 13 வது வார்டு பஜனை கோயில் தெரு மற்றும் குறுக்கு தெரு 1 குறுக்கு தெரு 2 சிமெண்ட் சாலை அமைத்தல் | 3.30 | 6,600 | 780 | 2 மாதங்கள் |
| | **மொத்தம்** | 65.00 | | | |

3. இதர விவரங்கள் ஒப்பந்த நமுனாவில் தெரிந்துகொள்ளவும்.

**(ஒம்) ஆ.சேகரன்**
செயல் அலுவலர்
பள்ளிகொண்டா பேரூராட்சி
வேலூர் மாவட்டம்

pdfMachine
**A pdf writer that produces quality PDF files with ease!**
Produce quality PDF files in seconds and preserve the integrity of your original documents. Compatible across nearly all Windows platforms, simply open the document you want to convert, click "print", select the "Broadgun pdfMachine printer" and that's it! Get yours now!

pdfMachine
**A pdf writer that produces quality PDF files with ease!**
Produce quality PDF files in seconds and preserve the integrity of your original documents. Compatible across nearly all Windows platforms, simply open the document you want to convert, click “print”, select the “Broadgun pdfMachine printer” and that’s it! Get yours now!